கார்த்திகை பூக்களே
கார்த்திகை பூக்களே
கார்த்திகை பூக்களே

கனவு வெல்லும் காலம் இங்கே
தொலைவில் இல்லை மலருங்கள்
தமிழன் வாழ்வில் இனிமேல் என்றும்
சந்தோசம் தான் உணருங்கள்
உருண்ட தலைகள் ஒன்றா ரண்டா
உடைந்த எலும்பு ஒன்றா ரண்டா
சிதைந்த முகங்கள் ஒன்றா ரண்டா
சிதறிய உடல்கள் ஒன்றா ரண்டா

கார்த்திகை பூக்களே
கார்த்திகை பூக்களே
கார்த்திகை பூக்களே

மாவீரர் தியாகத்தோடு ஒப்பிட
உலகில் எதுவும் இல்லை
மாவீரர் உடல் புதைந்தாலும்
மரணம் அவர்களை ஜெயித்திடவில்லை
ஆயுள் எல்லாம் நெஞ்சுக்குள்ளே
கோயில் கட்டி வைப்போமே
ஈழதேசம் உள்ள நாள் வரை
இறைவா என்று தொழுவோமே 2

கார்த்திகை பூக்களே
கார்த்திகை பூக்களே
கார்த்திகை பூக்களே

கார்த்திகை இருபத்தேளில்
கண்கள் தானாய் கண்ணீர் சிந்தும்
மாவீரர் தியாகம் எண்ணி
மனதில் பூதிய உறுதி தோன்றும்
கனமான இதயத்தோடு
காற்றும் கூட வணக்கம் சொல்லும்
காலம் நாளை வீரர் பெயரை
வரலாற்றில் வைக்கும் வைக்கும் 2

கார்த்திகை பூக்களே
கார்த்திகை பூக்களே
கார்த்திகை பூக்களே

தாயகம் காக்கும் போரில்
உயிர் விட்ட வீரர்கள் வாழ்க
தமிழுக்கு பெருமை சேர்த்து
தன்னை தந்த புலிகள் வாழ்க
கார்த்திகை இருபத்தேளில்
கைய்கள் கூப்பி தொழுகின்றோமே
மாவீரர் சரித்திரத்தில் மங்கா
புகளாய் வாழ்க வாழ்க 2
கார்த்திகை பூக்களே
கார்த்திகை பூக்களே
கார்த்திகை பூக்களே